**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE**
**CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.94/2021**
**Sessions :**
**Deposition of Witness for :PW1 , LW1**

| | |
|---|---|
| Name | : சத்தியமூர்த்தி |
| Father's/Husband Name | : முருகன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of** 10.08.2022.

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் தற்போது லத்தூர் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 2 சுஜாதார எனது மனைவி ஆவார். கடந்த 17.12.2020 ம் தேதி காலை 10 .30 மணி அளவில் எங்கள் வீட்டில் வாசல் எதிரில் ரோட்டை துப்புறவாளர்கள் துப்புறவு பணியை செய்து கொண்டு இருந்தார்கள். அப்போது நான் அவர்களிடம் ஏற்கனவே துப்புறவு செய்ததை எடுக்காமல் அதன் மேலே குப்பைகளை கொட்டுவதால் கொசு வருவதாகவும் துருநாற்றம் அடித்தாகவும் சொன்னேன்.

2. அதற்கு அவர்கள் இது குறித்து ஊராட்சி கிளர்க்கிடம் சொல்லுங்கள் எங்களிடம் சொல்லாதீர்கள் என்று சொன்னார்கள். அதன் பின் ஊராட்சி அலுவலகத்திற்கு சென்று கிளர்க் தியாகராஜ் (ஆஜர் 1 ம் எதிரி ) என்பவரிம் நான் கேட்டபோது அவர் உன்னால் என்ன செய்ய முடியுமா செய்துக்கொள் என்று சொல்லி அசிங்கமாக பேசினார். இது குறித்து பவுஞ்ரில் உள்ள பி.டி ஓ ஆபிசில் புகார் தெரிவித்தேன். மற்றும் Health inspector க்கு புகார் தெரிவித்தேன். மறு நாள் 18/12/2020 ம் தேதி 1ம் எதிரி தியாகராஜனின்

அண்ணன், உறவினர்கள் என்னிடம் வந்து அடிக்க வந்தார்கள்.

3. அதன் பின் அங்கு இருந்த நபர்கள் மடக்கி விட்டதால் சென்று விட்டார்கள். அதன் பின் மறுநாள் 19.12.2020 ம் தேதி நான் வேலை விசயமாக மதுராந்தகம் சென்று இருந்தபோது மதியம் சுமார் 1.30 மணி அளவில் ஊரில் இருந்து போன் வந்தது. அதில் எனது மனைவி சுஜாதாவை, தியாகராஜன் என்பவர் கத்தியால் கையில் வெட்டிவிட்டதாகவும், சியாமளா (ஆஜர் 2 ம் எதிரி மற்றும் தியாகராஜன்-1 ம் எதிரி) பெண்ணுறுப்பில் எட்டி உதைத்தாகவும் துணி எல்லாம் கிழித்து அடித்து விட்டதாக சொன்னார்கள். நான் கேள்வி பட்டு லத்தூருக்கு வந்தபோது என் மனைவியை சிகிட்சைக்காக பவுஞ்சூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக சொன்னார்கள்.

4. நான் இது கு/றத்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்ற போது ஆஜர் எதிரிகள் எங்கள் மீது ஒரு புகார் கொடுத்துக்கொண்டு இருந்தார். போலிசார் அவர்களை விசாரித்து அதன் பின் நான் வழக்கு சம்பந்தமாக புகார் கொடுத்தேன். என்னிடம காட்டப்படுமபுகார் நான் கொடுத்த புகார் ஆகும். அந்த புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.

**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.94/2021**
**Sessions :**
**Deposition of Witness for :PW2 , LW2**

| | |
|---|---|
| Name | : சுஜாதா |
| Husband Name | : சத்தியமூர்த்தி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of** 10.08.2022.

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் தற்போது லத்தூர் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சத்தியமூர்த்தி எனது கணவர் ஆவார். சுமார் 2 வருடததிற்கு முன்பு காலையில் எனது விட்டருகே துப்புறவு பணி நடந்து கொண்டு இருந்தபோது என் கணவர் அவர்களிடம் குப்பைகளை மேலே மேலே கொட்டுவதால் கொசு வருகிறது என்றும் துர்நாற்றம் வருகிறது என்றும் கேட்டார். இது குறித்துஅஅவர்கள் நாங்கள் அவ்வாறு தான் செய்வோம் என்றும் நீங்கள் கிளர்க்கிடம் கேளுங்கள் என்று சொன்னார்கள்.

2. அதன் பின் எனது கணவர் சம்பந்தப்பட்ட கிளர்க்கிடம் ( தியாகராஜன் ஆஜர் 1 ம் எதிரி) கேட்டபோது அவர் உங்களால் என்ன பண்ண முடியுமோ பண்ணுங்கள் என்று சொன்னார். அதன் பின் எனது கணவர் பவுஞ்சூரில் உள்ள

Health Inspector ம் புகார் கொடுத்தார். அதன் பின் தியாகராஜனின் உறவினர்கள் என் வீட்டருகே வந்து அவர்கள் எனது கணவர் வீட்டில் படுத்துக்கொண்டு இருந்தபோது வெளியே வாடா என்று சொல்லி அடிக்க வந்தார்கள். 2 நாள் கழித்து என் கணவர் மதுராந்தக்ம வேலை விசயமாக சென்று இருந்தபோது நான் தியாகராஜன் வீட்டருகே லோன் கட்டுவதற்காக சென்ற போது தியாகராஜனின் அன்னி சியாமளா( 2ம் ஆஜர் எதிரி) என்னை முடியை பிடித்து இழுத்து அடித்துக்கொண்டு இருந்தார்கள்.

3. அப்போது தியாகராஜன் என்னை வயிற்றில் எட்டி உதைத்து கத்தியால் எனது இடது கையில் வெட்டினார். அவர்கள் எனது நைட்டியை பிடித்து இழுத்து கிழித்து விட்டார்கள். நான் மருத்துவமனைக்கு பவுஞ்சூருக்கு சிகிட்சைக்கா சென்றேன். இது குறித்து நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்த போது தியாகராஜனும், புகார் கொடுக்க வந்திருந்தார் . போலிசார் என் காயத்தை பார்த்து மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு சொல்லி எங்களுடைய புகாரை பெற்றுக்கொண்டார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.